1969 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: வேலைகளை எடுத்துக் கொள்வதானால், அதற்கான திட்டங்கள் தயாரிக்க வேண்டும். அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேண்டும். அந்த திட்டங்களை மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அங்கீகரிக்க வேண்டும். அப்படி எல்லாம் செய்யாமல் நேரடியாக வேலைகளைச் செய்கிறோம் என்றால் பின்னாலே தணிக்கை செய்கிறபோது, அந்தக் குற்றத்தைச் சுட்டிக் காட்டி தலைவர் அவர்கள் அதைத் திருப்பிக் கட்ட வேண்டுமென்று, சர்சார்ஜ் போட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் இந்த விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. அதிலேதான் சில சமயம் காலதாமதம் ஏற்படுகிறது. என்றாலும் அவைகளை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது.

இந்து அறநிலையங்கள்

*9. வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து அறநிலைய நிர்வாகத்தை மாற்றியமைத்து மதத் தலைவர்களின் பொறுப்பில் கோவில்கள் நிர்வாகத்தை விட வேண்டுமென்று கோரி சேலத்தில் தமிழ்நாடு இந்து மிஷனைச் சேர்ந்தவர்கள் 22—7—1968-ல் உண்ணாவிரதமிருந்தது அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆமெனில் இவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(ஆ) சேலம் தமிழ்நாடு இந்து சமய நிறுவனம் வெளியிட்ட சிறு நூலில் தந்த பல்வேறு குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஆய்வு செய்து பார்த்ததில் இந்தக் குற்றச்சாட்டுகளின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, இந்த தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் எல்லாரிடத்திலும் கிடையாது. ஒரு பகுதியினரிடத்தில்தான் இருக்கிறது. தேசத்திலே இன்றைக்கு பாங்கு தேசியமயம், தொழிற்சாலை தேசியமயம் என்பதைப்போன்று கொள்கையிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கேளுங்கள். கொள்கையைப்பற்றியோ, மற்றும் சம்பந்தமாகவோ சொல்ல வேண்டாம்.

திரு. எம். சுரேந்திரன்: கொள்கையிலே இந்த நம்பிக்கை உள்ளவர்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது நல்லது என்று பலராலும் கூறப்படுகிறது. அதேபோன்று தெய்வ நம்பிக்கையும் மத நம்பிக்கையும் உள்ளவர்கள் இந்தக் காரியம் செய்வது சிறந்ததாக இருக்கும் என்று அரசாங்கம் கருதவில்லையா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: பெரும்பாலும் அப்படிப் பட்டவர்களை வைத்துத்தான் இந்த அறநிலைய ஆலோசனை கமிட்டி ஒன்று இருக்கிறது. அதிலுள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும் பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய யோசனையின் பேரில்தான் இந்த காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, மதத் தலைவர்களில் ஒருவராகிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரை மேலவைக்கு இந்த அரசு நியமித்திருப்பதனை தமிழ் நாடு இந்து மிஷன்காரர்கள் பாராட்டியிருக்கிறார்களா? அல்லது வரவேற்றிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினாலே பாராட்டு வரவில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்திலுள்ள கோயில்களில் பல கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை வசதிபடைத்த பெரு நிலச்சுவாந்தார்கள் ஆக்கிரமித்து, அதன் வருமானத்தை அனுபவித்து வருவது அரசாங்கத்துக்குத் தெரியுமா? தெரியுமானால் அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? எடுக்கவில்லையென்றால் எடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அப்படி எந்தவிதமான தகவலும் எனக்கு இல்லை. தகவல் தெரிவித்தால் நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்து அற நிலையங்களில் கோயில் காரியங்களுக்கு முறையாக செலவிடப்படும் தொகை போக எஞ்சியுள்ள வருவாயை கல்வி, மருத்துவம் போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு முடிவு எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: சட்டத்திற்கு உட்பட்ட சகல காரியங்களுக்கும் இந்த பணம் செலவழிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Purchase Committee for Tamil Nadu Electricity Board

*10. *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute a purchase committee in the Tamil Nadu State Electricity Board; and

(*b*) if so, whether the Government would consider inclusion of non-officials in the Committee?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம். தமிழ்நாடு மின்சார வாரியம், பண்டங்கள் கொள்முதல் ஒப்பந்தப்புள்ளிக்